# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



அனுப்புநர்:-

திரு.சு.சங்கரமூர்த்தி,B.E.,
இணை இயக்குநர்/உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
கணபதி நகர் 2-வது தெரு,
கணபதி நகர் கிளை அஞ்சல் எதிரில்,
மெடிக்கல் காலேஜ் ரோடு,
தஞ்சாவூர்.
மின்அஞ்சல்-ddtjrregion@gmail.com

பெறுநர்:

தலைவர்,
அண்ணலக்ராஹாரம் ஊராட்சி,
கும்பகோணம் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

ந.க.எண்:1420/2021தமா4 நாள்:16.08.2021

அய்யா,

பொருள்: மனைப்பிரிவு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் உள்ளூர் திட்டகுழுமம், கும்பகோணம் வட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம், அண்ணலக்ராஹாரம் ஊராட்சி, மாத்தி கிராமம், நி.அ.எண்கள்: 271/2,3-ல் அமைந்துள்ள 9950.00ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான அனுமதி/இசைவு - ஒப்புதல் வழங்குதல் குறித்து

பார்வை:
1) மனுதாரர் திரு.E.கிருபாகரன், அவர்களின் விண்ணப்பம் நாள்: 24.02.2021
2)இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்: 12.07.2021
3) நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்:19799/2020/போ நாள்:24.12.2020
4) தலைவர், அண்ணலக்ராஹாரம் ஊராட்சி அவர்களின் கடிதம் நாள் இல்லை(இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்:23.07.2021)
5)அரசாணை எண்:138 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்:04.06.2004
6)அரசாணை எண்:79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்:04.06.2017
7) அரசாணை எண்:18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:04.02.2019 மற்றும் அரசாணை எண்:16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:31.01.2020
8) அரசாணை எண்:141 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை(UD4(3)) நாள்:23.9.2020
9) அரசாணை எண்:181 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை(UD4(1)) நாள்:09.12.2020
10)அரசு கடிதம் எண்:19113/நவ4(3)/2017-1,வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்:30.8.2017
11)நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:13686/2017/LA1, நாள்:08.09.2017
12)கும்பகோணம் உள்ளூர் திட்டக்குழும தீர்மான எண்:08 நாள்:23.07.2017

......

பார்வை (1)-ல் சுட்டிய மனுதாரர் கடிதங்களுடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு இசைவுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பார்வை (2)-ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் நாள்: 12.07.2021 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை (4)-ல் சுட்டிய கடிதம் மூலம் சாலை, மூலை முடக்கு, உள்ளாட்சிக்கான பொது ஒதுக்கீடு மற்றும் மின்சார வாரியத்திறகான பொது ஒதுக்கீடுகளை தானமாக தானபத்திரம் எண்:3379/2021 நாள்:23.07.2021-ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2)மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு திட்ட அனுமதி எண்:09/2021 மற்றும் ம.வ/கு.உ.தி.கு.எண்:05/2021 என எண்ணிடப்பட்டு 2 அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானப்பத்திரம் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

3)மேலும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது மனைப்பிரிவு நிபந்தனை எண்:9(ஆ)-ன் படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

For AB PROPERTIES
Sanketh
Partner.

4) உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்மந்தப்பட்ட பத்திர பதிவு அலுவலகத்திற்கும், நில அளவை துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5) செயலாணை கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறும் தெரிவித்து கொள்ளப்படுகிறது.

சிறப்பு நிபந்தனை:

1. (a) பார்வை (10)-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை (8)-ல் கண்ட TNCDBR-2019 விதி எண் 47(11)-ன் படியும் மாநகராட்சி/நகராட்சி பகுதி எனில் **"Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants". After collecting the necessary fees the final layout sketch, permit of planning authority along with approved of Local Body shall be issued to the applicant (s) directly.**

(b) மாநகராட்சி/நகராட்சி அல்லாத பகுதியில் **"Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with approved of Local Body shall be issued to the applicant(s)directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body.**

2. **(EWS)** பொருளாதாரத்தால் பின் தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்:16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:31.01.2020-ன்படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3. பார்வை (9) மற்றும் (10)-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின் படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களின் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. **"The Tamilnadu Government in G.O.Ms.No.112 Housing and Urban Development Department dated. 22.6.2017 have approved the Tamilnadu Real Estate (Regulation and Development) Act 2016. The promoter has to advertise market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Projecct or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority-ன்படி** நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5. பார்வை (5) மற்றும் (8)-ல் காண் அரசாணையின் படி மனைகளுக்கான நன்னிலை வரி ரூ.16000/- (ரூபாய் பதினாறாயிரம் மட்டும்) உரிய கணக்கு தலைப்பில் நாள்: **13.08.2021** அன்று செலுத்தப்பட்டுள்ளது.

6. பார்வை (7) -ல் காண் அரசாணையின் படி மனையிடத்திற்கான 10% பொது ஒதுக்கீடு நில வழிகாட்டு மதிப்பின் அடிப்படையில் கட்டணமாக ரூ.**20,000/-** (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) உரிய கணக்கு தலைப்பில் நாள்: **13.08.2021** அன்று செலுத்தப்பட்டுள்ளது.

இணை இயக்குநர்/உதவி இயக்குநர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்.
தஞ்சாவூர் மாவட்டம்.

இணைப்பு:
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்
( 2 தொகுப்பு மற்றும் அசல் தானப்பத்திரம் )

நகல்:
திரு.E.கிருபாகரன்,
30/F2, சிம்மா மகால், இந்திராகாந்தி சாலை,
ஆழ்வார்திரு நகர், திருவள்ளூர் மாவட்டம். — கடித நகல்

2 இருப்பு கோப்பு - வரைபடம்-1 மற்றும் நிபந்தனைகள் படிவம்-1
3 கோப்பு - வரைபடம்-1 மற்றும் நிபந்தனைகள் படிவம்-1

**For AB PROPERTIES**
Partner.

தமிழ்நாடு அரசு
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

ந.க.எண்: 1420/2021தமா4 நாள்: .08.2021

மனைப்பிரிவு நிபந்தனைகள்

1.நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடுகளின் அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்புத் துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.

3.மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையும் விற்கவோ குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.

4.அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகள் குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.மேலும் மனைஉபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR-2019-ல் குறிப்பிட்டுள்ள Residential use-ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.

5. மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின் கம்பி பாதை / தந்திக் கம்பிப் பாதை அமைந்தால், கம்பிப்பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.

6. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

7. 7.20மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லா தெருக்களிலும் நிழல்தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையில் இருந்து 1.00மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.

8.மனுதாரர் மனைப்பிரிவு தொடர்புடைய உள்ளாட்சி அலுவலரிடமிருந்து ஒப்புதல் பெற்றுக்கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் நகர் ஊரமைப்பு துறை மற்றும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.

9(அ). மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் திட்ட அனுமதி/இசைவு (Planning Permision/ Concurrence) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கள் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

9(ஆ).மேற்படி மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும் போதுஅங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

10. மனுதாரர் நகர் ஊரமைப்பு துறையிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் / விடுதலன்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'x 4' அளவிலான நிரந்திர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மான எண்ணும்,நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்திரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

11.மனுதாரர் சமர்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

For AB PROPERTIES
Sankat.
Partner.

12. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு Planning Permission/Concurrence ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட Planning Permission/Concurrence ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு துறையால் ரத்து செய்யப்படும்.

13) விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்

| விபரம் | | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | | 9950.00ச.மீ | - |
| ஒதுக்கிய மனைகள் | 51 | -- | -- |
| பொது ஒதுக்கீடு:<br>1.பூங்கா | அரசு வழிகாட்டு மதிப்பீட்டின்படி பூங்கா பரப்பு 400.00ச.மீ (10%) இடத்திற்கான தொகையை அரசின் உரிய கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. | | |
| 2.உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகள் | - | 34056.00ச.அடி | - |
| 3.உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு | - | 612.00ச.அடி | 0.84% |
| 4.தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கானது | - | 613.00ச.அடி | 0.84% |

இணை இயக்குநர்/உதவி இயக்குநர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்.
தஞ்சாவூர் மாவட்டம்.

For AB PROPERTIES
Partner.

(71)

கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம்,வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின்

செயல்முறை நடவடிக்கைகள்

பிறப்பிப்பவர் திரு.இரா.இராசன்..

ந.க.எண். 195/2020/ஆ2 நாள்.. .10.2021

பொருள் :: மனைப்பிரிவு - கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம் - அண்ணலக்ரஹாரம் ஊராட்சி மாத்தி கிராமம் புல எண் 271/2,3-ல் *9950.00 சதுரமீட்டர்* பரப்பளவில் குடியிருப்பு மனைப் பிரிவிற்கு இணை இயக்குநர்/உதவி இயக்குநர்,மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் மனைப் பிரிவிற்கு (2 - 30, 35 - 42, 47 - 50 ) 41 மனைகள் ஒப்புதல் அளித்து ஆணையிடுப்படுகிறது.

பார்வை ::

1) அரசாணை எண்.71 ஊரக வளர்ச்சித்துறை நாள்.16.06.2003.
2) நகர ஊரமைப்பு ஆணையர்,சென்னை அவாகளின் சுற்றறிக்கை கடித ந.க.எண்.13686/2017/LA1 நாள்.08.09.2017
3) அரசாணை எண்.18(மாநகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) நாள்-14.02.2019 மற்றும் 31.01.2020.
4) இணை இயக்குநர்/உதவி இயக்குநர்,மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக திட்ட அனுமதி எண் 09/2021.
5) அரசாணை 181 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி(பஎ4(1)துறை நாள்.09.12.2020
6) உதவி இயக்குநர்,உறுப்பினர் செயலர், கும்பகோணம் உள்ளூர் திட்டக்குழுமம், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,தஞ்சாவூர் கடித ந.க.எண்.1420/2021/தமா4 நாள் 16.08.2021.
7) தானபத்திர எண்.3379/2021.
8) அண்ணலக்ரஹாரம் ஊராட்சி மன்ற தீர்மான எண்.36 நாள்..09.09.2021.
9) அண்ணலக்ரஹாரம் ஊராட்சி மன்ற தலைவர் கடித நாள்..14.09.2021.

-----

**ஆணை-**

1) கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், அண்ணலக்ரஹாரம் ஊராட்சி மாத்தி கிராமம், புல எண் 271/2,3-ல் *9950.00 சதுரமீட்டர்* பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப் பிரிவிற்கு, பார்வை 2-ல் காணும் உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக்குழுமம், கும்பகோணம் அவர்களால் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தொழில் நுட்ப அனுமதியின்படி மனுதாரர், மேற்காணும் மனைப்பிரிவு சாலைகளை தார் சாலை அமைத்தும், இதில் உள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஆகியவற்றை பதிவு செய்யப்பட்ட தான பத்திர எண் 3379/2021-ன் படி ஒப்படைத்துள்ளார்கள்.

2) இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் முலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட்டுள்ளது.

3) மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.

4) அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகள் குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இதில் கடை, பண்டகசாலை மற்றும் குடியிருப்பு அல்லா கட்டடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது. பொது வசதிகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ள உபயோகங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். அந்த இடங்களை ஒதுக்கப்பட்ட உபயோகத்திற்காக நில அளவு ஆவணங்களில் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும்.

5) விரிவு அபிவிருத்தி திட்டப் பகுதிக்குள் அமையும் மனைப் பிரிவு எனில், திட்ட விதிகளின்படி தனித்தொரு குடியிருப்பு மனையில் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும். ஒரு பக்கம் இணைந்த வீடுகள் அனுமதிக்கப்பட்ட மனையில் ஒரு பக்கம் இணைந்த வீடுகளே கட்டப்பட வேண்டும். இதற்கு மாறாக எக்காலத்திலும் தனிப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவினையோ, அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையையும் பயன்படுத்தக் கூடாது.

6) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு வரைபடத்தில் காட்டியுள்ளவாறு கட்டட வரம்பு விடப்பட வேண்டும். மனைப் பிரிவில் அமையும் 7.20 மீட்டர் (23.6 அடி) மற்றும் 9 மீட்டர் (29.6 அடி) அகலம் வரையிலான சாலைகளுக்கு 1.5 மீட்டரும் (5 அடியும்) 12 மீட்டருக்கு (40 அடி) மேல் மற்றும் 15 மீட்டர் (50 அடி) அகலத்திற்குட்பட்ட சாலைகளுக்கு 3 மீட்டரும் (10 அடியும்) 15 மீட்டர் (50 அடி)அகலத்திற்கு மேலும் 21 மீட்டர் (70 அடி) அகலத்திற்கும் உட்பட்ட சாலைகளுக்கு 4.5 மீட்டரும் (15 அடி) 24 மீட்டர் (80 அடி) அகலம் மற்றும் அதற்கு மேற்பட்ட அகலம் கொண்ட சாலைகளுக்கு 6 மீட்டர் ( 20 அடி) என்ற அளவில் கட்டட வரம்பு விடப்பட வேண்டும். த.நா.மா.ந.கட்ட விதிகளின்படி / த.நா. ஊராட்சி கட்டட விதியின்படி மனையின் எல்லைக்கும் கட்டட வரம்பிற்கும் உட்பட்ட நிலப்பகுதியில் தெருவின் உயர் மட்டத்திலிருந்து 1.8 மீ, (6 அடி) / 2.4 மீ. (8 அடி) மேற்படாத சுற்றுசுவர் அல்லது வேலி தவிர வேறு எந்தவித கட்டடமோ சுவரோ கட்டுதல் கூடாது.

7) மனையின் பக்க எல்லைக்கும், கட்டடத்திற்கும் இடையில் ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்தது 1.5 மீட்டர் அளவுள்ள திறந்தவெளி அல்லது ஒரு பக்கம் மட்டும் குறைந்தது 3 மீட்டர் / 1 மீட்டர் திறந்தவெளி விடப்பட வேண்டும். 10 மீட்டர் வரை அகலமுடைய மனைகளுக்கு பக்கத் திறவெளி ஒரு பக்கத்திலாவது குறைந்தது 1.5 மீட்டர் விடப்பட வேண்டும்.

8) ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும், கட்டடத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கும் வியாப்பிக்கின்ற வகையில் குறைந்தது 3.00 மீட்டர் / 2.00 மீட்டர் அளவுள்ள திறந்தவெளி விடப்பட வேண்டும். இந்த பின்பக்கத் திறந்தவெளியில் கிணறு, கழிப்பறை, எருக்குழி, மாட்டுத் தொழுவம், உந்து வண்டி நிறுத்தம் கொட்டகை போன்றவை அல்லது அவை போன்ற குடியிருப்பு அல்லாத ஆனால் அதைச் சார்ந்த கட்டடங்கள் மட்டுமே அமைக்கப்படலாம். ஆனால் கட்டடங்கள் மொத்தமாக பின்பக்க எல்லையின் நீளத்தில் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்படாமலும் மனையின் பின்பக்க நில மட்டத்திலிருந்து 3.00 மீட்டர் முதல் 3.75 மீட்டர் உயரத்திற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

9) விரிவு அபிவிருத்தித் திட்டப் பகுதியில் அமையும் மனைப் பிரிவு எனில், திட்ட விதிகளின்படி மனையின் பரப்பில் 50 அல்லது 57 விழுக்காட்டிற்கு மேல் கட்டடம் கட்டப்படக் கூடாது, கட்டிடம் கட்டாமல் விடப்படும் திறந்தவெளியினை தோட்டமாகவோ, திறந்த முற்றமாகவோ, தனிப்பட்ட பயன்பாட்டிற்காகவோ, துப்புரவாக பராமரித்தல் வேண்டும்.

10) மனைப் பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் உள்ளாட்சியிலிருந்து கட்டட அனுமதி பெற வேண்டும்.

11) மனைப் பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். அம்மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

12) மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி நிபந்தனைக்குட்படுவதாக எழுத்து மூலமாக அண்ணலக்ரஹாரம் ஊராட்சி மன்றத் தலைவர் / வட்டார வளர்ச்சி அலுவலரிடம் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைப் பிரிவு நிபந்தனைகள் தொடர்புடைய சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்கப்படுவதும் அல்லது குத்தகைக்கு விடப்படுவதும் மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டுதான் செய்யப்பட வேண்டும். மனைகள் விற்பவரையும், வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகளை விற்பனைப் பத்திரங்களின் பகுதியாக சேர்க்கப்பட வேண்டும்.

13) மனுதாரர் வட்டார வளர்ச்சி அலுவலர், அண்ணலக்ரஹாரம் ஊராட்சிக்கு மனைப் பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப் பிரிவு அமையும் இடத்தில் அறிவிப்பு பலகை மூலம் மனைப் பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மானம் எண்ணும், நாளும் மன்றத்திற்கும், மனுதாரருக்கும் ஒப்பந்தம் ஆன நாளும், எண்ணும் தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

14) மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப் பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது

15) உள்ளாட்சியில் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவு வரைபடத்தினை சம்மந்தப்பட்ட பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும், உரிய நடவடிக்கைக்கும் அனுப்பி வைக்குமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக்குழுமம், கும்பகோணம் அவர்களின் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

16) ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப் பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் இன்றி மனைப் பிரிவு நுழைவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

17) தெரு விளக்குகள் குறித்த காலத்தில் உரிமையாளரது சொந்த செலவில் ஏற்படுத்தி கொடுக்கப்பட வேண்டும். பணிகள் முழுமையாக குறித்த காலக் கெடுவிற்குள் முடிக்கப்பட வேண்டும்.

18)எனவே, பார்வை 1-ல் காணும் உதவி இயக்குநர்,உறுப்பினர் செயலர், கும்பகோணம் உள்ளூர் திட்டக்குழுமம்,மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,தஞ்சாவூர் கடித ந.க.எண். 1420/2021/தமா4 நாள் 16.08.2021-அனுமதி எண் 05/2021-ன்படியும் இந்த மனைப்பிரிவில் உள்ள (2 - 30, 35 - 42, 47 - 50 ) 41 மனைகள் ஆகியவற்றிற்கு இறுதி உத்தரவு வழங்கப்படுகிறது.

19)அண்ணலக்ரஹாரம் ஊராட்சி பலவகை ரசீது எண்.C56146 நாள்.09.09.2021 தொகை.ரூ.25000/-

20)மேற்கண்ட நிபந்தனைகள் ஏதும் மீறப்பட்டதாக பின்னர் கண்டறியப்பட்டால் எந்தவித முன்னறிவிப்பின்றி மேற்படி வழங்கப்பட்ட ஒப்புதலானது இரத்து செய்யப்படும்.

இணைப்பு - மனைப்பிரிவு வரைபடம்

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
கும்பகோணம்

22/10/21

பெறுநர்
திரு.E.கிருபாகரன்,
த/பெ.இளங்கோவன்,
R2 சிம்மா மஹால்,
30 இந்திரா காந்தி சாலை,
ஆழ்வார் திருநகர்,
திருவள்ளூர்.

நகல்

1. உதவி இயக்குநர்,உறுப்பினர் செயலர், கும்பகோணம் உள்ளூர் திட்டக்குழுமம், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,தஞ்சாவூர்.
2. சார்பதிவாளர் அவர்கள், கும்பகோணம்.
3. ஒன்றிய பொறியாளர், ஊராட்சி ஒன்றியம், கும்பகோணம்.
4. ஊராட்சி மன்றத் தலைவர்,அண்ணலக்ரஹாரம்,ஊராட்சி.

கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம்,வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின்

செயல்முறை நடவடிக்கைகள்

பிறப்பிப்பவர் திரு.இரா.இராசன்..

ந.க.எண். 24/2022/ஆ2

நாள்..01.03.2022

பொருள் :: மனைப்பிரிவு - கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம் - அண்ணலக்ரஹாரம் ஊராட்சி மாத்தி கிராமம் புல எண் 271/2,3-ல் 9950.00 சதுரமீட்டர் பரப்பளவில் குடியிருப்பு மனைப் பிரிவிற்கு இணை இயக்குநர்/உதவி இயக்குநர்,மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் மனைப் பிரிவிற்கு (1,31-34,43-46,51 ) 10 மனைகள் ஒப்புதல் அளித்து ஆணையிடப்படுகிறது.

பார்வை ::
1) அரசாணை எண்.71 ஊரக வளர்ச்சித்துறை நாள்.16.06.2003.
2) நகர ஊரமைப்பு ஆணையர்,சென்னை அவாகளின் சுற்றறிக்கை கடித ந.க.எண்.13686/2017/LA1 நாள்.08.09.2017
3) அரசானை எண்.18(மாநகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) நாள்-14.02.2019 மற்றும் 31.01.2020.
4) இணை இயக்குநர்/உதவி இயக்குநர்,மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக திட்ட அனுமதி எண் 09/2021.
5) அரசாணை 181 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி(UD4(1)துறை நாள்.09.12.2020
6) உதவி இயக்குநர்,உறுப்பினர் செயலர், கும்பகோணம் உள்ளூர் திட்டக்குழுமம், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,தஞ்சாவூர் கடித ந.க.எண்.1420/2021/தமா4 நாள் 16.08.2021.
7) தானபத்திர எண்.3379/2021.
8) அண்ணலக்ரஹாரம் ஊராட்சி மன்ற தீர்மான எண்.36 நாள்..09.09.2021.
9) அண்ணலக்ரஹாரம் ஊராட்சி மன்ற தலைவர் கடித நாள்..14.09.2021.
10) திரு.E.கிருபாகரன்,த/பெ.இளங்கோவன்,R2 சிம்மா மஹால்,30 இந்திரா காந்தி சாலை,ஆழ்வார் திருநகர்,திருவள்ளூர் கடிதநாள்.21.02.2022.
11)இவ்வலுவலக நக.எண்.195/2020/ஆ2 நாள்.23.10.2021.

-----

**ஆணை-**

1) கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், அண்ணலக்ரஹாரம் ஊராட்சி மாத்தி கிராமம், புல எண் 271/2,3-ல் 9950.00 சதுரமீட்டர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப் பிரிவிற்கு, பார்வை 2-ல் காணும் உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக்குழுமம், கும்பகோணம் அவர்களால் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தொழில் நுட்ப அனுமதியின்படி மனுதாரர், மேற்காணும் மனைப்பிரிவு சாலைகளை தார் சாலை அமைத்தும், இதில் உள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஆகியவற்றை பதிவு செய்யப்பட்ட தான பத்திர எண் 3379/2021-ன் படி ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் மின் அழுத்த பாதை செல்வதால் இந்த மனைப்பிரிவில் உள்ள ((1,31-34,43-46,51 ) 10 மனைகள் நிறுத்திவைக்கப்பட்டதில் தற்போது மின் அழுத்த பாதை அகற்றி அதற்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

2) இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட்டுள்ளது.

3) மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.

4) அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகள் குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இதில் கடை, பண்டகசாலை மற்றும் குடியிருப்பு அல்லா கட்டடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது. பொது வசதிகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ள உபயோகங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். அந்த இடங்களை ஒதுக்கப்பட்ட உபயோகத்திற்காக நில அளவு ஆவணங்களில் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும்.

5) விரிவு அபிவிருத்தி திட்டப் பகுதிக்குள் அமையும் மனைப் பிரிவு எனில், திட்ட விதிகளின்படி தனித்தொரு குடியிருப்பு மனையில் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும். ஒரு பக்கம் இணைந்த வீடுகள் அனுமதிக்கப்பட்ட மனையில் ஒரு பக்கம் இணைந்த வீடுகளே கட்டப்பட வேண்டும். இதற்கு மாறாக எக்காலத்திலும் தனிப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவினையோ, அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையையும் பயன்படுத்தக் கூடாது.

6) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு வரைபடத்தில் காட்டியுள்ளவாறு கட்டட வரம்பு விடப்பட வேண்டும். மனைப் பிரிவில் அமையும் 7.20 மீட்டர் (23.6 அடி) மற்றும் 9 மீட்டர் (29.6 அடி) அகலம் வரையிலான சாலைகளுக்கு 1.5 மீட்டரும் (5 அடியும்) 12 மீட்டருக்கு (40 அடி) மேல் மற்றும் 15 மீட்டர் (50 அடி) அகலத்திற்குட்பட்ட சாலைகளுக்கு 3 மீட்டரும் (10 அடியும்) 15 மீட்டர் (50 அடி)அகலத்திற்கு மேலும் 21 மீட்டர் (70 அடி) அகலத்திற்கும் உட்பட்ட சாலைகளுக்கு 4.5 மீட்டரும் (15 அடி) 24 மீட்டர் (80 அடி) அகலம் மற்றும் அதற்கு மேற்பட்ட அகலம் கொண்ட சாலைகளுக்கு 6 மீட்டர் ( 20 அடி) என்ற அளவில் கட்டட வரம்பு விடப்பட வேண்டும். த.நா.மா.ந.கட்ட விதிகளின்படி / த.நா. ஊராட்சி கட்டட விதியின்படி மனையின் எல்லைக்கும் கட்டட வரம்பிற்கும் உட்பட்ட நிலப்பகுதியில் தெருவின் உயர் மட்டத்திலிருந்து 1.8 மீ. (6 அடி) / 2.4 மீ. (8 அடி) மேற்படாத சுற்றுசுவர் அல்லது வேலி தவிர வேறு எந்தவித கட்டடமோ சுவரோ கட்டுதல் கூடாது.

7) மனையின் பக்க எல்லைக்கும், கட்டடத்திற்கும் இடையில் ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்தது 1.5 மீட்டர் அளவுள்ள திறந்தவெளி அல்லது ஒரு பக்கம் மட்டும் குறைந்தது 3 மீட்டர் / 1 மீட்டர் திறந்தவெளி விடப்பட வேண்டும். 10 மீட்டர் வரை அகலமுடைய மனைகளுக்கு பக்கத் திறவெளி ஒரு பக்கத்திலாவது குறைந்தது 1.5 மீட்டர் விடப்பட வேண்டும்.

8) ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும், கட்டடத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கும் வியாப்பிக்கின்ற வகையில் குறைந்தது 3.00 மீட்டர் / 2.00 மீட்டர் அளவுள்ள திறந்தவெளி விடப்பட வேண்டும். இந்த பின்பக்கத் திறந்தவெளியில் கிணறு, கழிப்பறை, எருக்குழி, மாட்டுத் தொழுவம், உந்து வண்டி நிறுத்தம் கொட்டகை போன்றவை அல்லது அவை போன்ற குடியிருப்பு அல்லாத ஆனால் அதைச் சார்ந்த கட்டடங்கள் மட்டுமே அமைக்கப்படலாம். ஆனால் கட்டடங்கள் மொத்தமாக பின்பக்க எல்லையின் நீளத்தில் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்படாமலும் மனையின் பின்பக்க நில மட்டத்திலிருந்து 3.00 மீட்டர் முதல் 3.75 மீட்டர் உயரத்திற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

9) விரிவு அபிவிருத்தித் திட்டப் பகுதியில் அமையும் மனைப் பிரிவு எனில், திட்ட விதிகளின்படி மனையின் பரப்பில் 50 அல்லது 57 விழுக்காட்டிற்கு மேல் கட்டடம் கட்டப்படக் கூடாது, கட்டிடம் கட்டாமல் விடப்படும் திறந்தவெளியினை தோட்டமாகவோ, திறந்த முற்றமாகவோ, தனிப்பட்ட பயன்பாட்டிற்காகவோ, துப்புரவாக பராமரித்தல் வேண்டும்.

10) மனைப் பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் உள்ளாட்சியிலிருந்து கட்டட அனுமதி பெற வேண்டும்.

11) மனைப் பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். அம்மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

12) மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி நிபந்தனைக்குட்படுவதாக எழுத்து மூலமாக அண்ணலக்ரஹாரம் ஊராட்சி மன்றத் தலைவர் / வட்டார வளர்ச்சி அலுவலரிடம் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைப் பிரிவு நிபந்தனைகள் தொடர்புடைய சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்கப்படுவதும் அல்லது குத்தகைக்கு விடப்படுவதும் மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டுதான் செய்யப்பட வேண்டும். மனைகள் விற்பவரையும், வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகளை விற்பனைப் பத்திரங்களின் பகுதியாக சேர்க்கப்பட வேண்டும்.

13) மனுதாரர் வட்டார வளர்ச்சி அலுவலர், அண்ணலக்ரஹாரம் ஊராட்சிக்கு மனைப் பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப் பிரிவு அமையும் இடத்தில் அறிவிப்பு பலகை மூலம் மனைப் பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மானம் எண்ணும், நாளும் மன்றத்திற்கும், மனுதாரருக்கும் ஒப்பந்தம் ஆன நாளும், எண்ணும் தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

14) மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப் பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது

15) உள்ளாட்சியில் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவு வரைபடத்தினை சம்மந்தப்பட்ட பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும், உரிய நடவடிக்கைக்கும் அனுப்பி வைக்குமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக்குழுமம், கும்பகோணம் அவர்களின் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

16) ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப் பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் இன்றி மனைப் பிரிவு நுழைவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

17) தெரு விளக்குகள் குறித்த காலத்தில் உரிமையாளரது சொந்த செலவில் ஏற்படுத்தி கொடுக்கப்பட வேண்டும். பணிகள் முழுமையாக குறித்த காலக் கெடுவிற்குள் முடிக்கப்பட வேண்டும்.

18)எனவே, பார்வை 1-ல் காணும் உதவி இயக்குநர்,உறுப்பினர் செயலர், கும்பகோணம் உள்ளூர் திட்டக்குழுமம்,மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,தஞ்சாவூர் கடித ந.க.எண். 1420/2021/தமா4 நாள் 16.08.2021-அனுமதி எண் 05/2021-ன்படியும் மின் அழுத்த பாதையை அகற்றி விட்டபடியால் இந்த மனைப்பிரிவில் உள்ள ((1,31-34,43-46,51 ) )இவ்வலுவலக நக.எண்.195/2020/ஆ2 நாள்.23.10.2021ன்படி நிறுத்திவைக்கப்பட்ட 10 மனைகளுக்கு இறுதி உத்தரவு வழங்கப்படுகிறது.

19)அண்ணலக்ரஹாரம் ஊராட்சி பலவகை ரசீது எண்.C56146 நாள்.09.09.2021 தொகை.ரூ.25000/-

20)மேற்கண்ட நிபந்தனைகள் ஏதும் மீறப்பட்டதாக பின்னர் கண்டறியப்பட்டால் எந்தவித முன்னறிவிப்பின்றி மேற்படி வழங்கப்பட்ட ஒப்புதலானது இரத்து செய்யப்படும்.

இணைப்பு - மனைப்பிரிவு வரைபடம்

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
கும்பகோணம்

BLOCK DEVELOPMENT OFFICER
VILLAGE PANCHAYAT(S),
KUMBAKONAM

பெறுநர்
திரு.E.கிருபாகரன்,
த/பெ.இளங்கோவன்,
R2 சிம்மா மஹால்,
30 இந்திரா காந்தி சாலை,
ஆழ்வார் திருநகர்,
திருவள்ளூர்.

நகல்

1. உதவி இயக்குநர்,உறுப்பினர் செயலர், கும்பகோணம் உள்ளூர் திட்டக்குழுமம், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,தஞ்சாவூர்.
2. சார்பதிவாளர் அவர்கள், கும்பகோணம்.
3. ஒன்றிய பொறியாளர், ஊராட்சி ஒன்றியம், கும்பகோணம்.
4. ஊராட்சி மன்றத் தலைவர்,அண்ணலக்ரஹாரம்,ஊராட்சி.

## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate